# தாமரைப்பாடி ஊராட்சி
# தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின்
# நடவடிக்கைகள்
## முன்னிலை:-திரு.பா.மலரவன்,பி.எஸ்.சி,

நாள் : 12.11.2019

ந.க.எண் : 2967/2019/ஊ2

பொருள் : மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - திண்டுக்கல் மாவட்டம் - திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம் - தாமரைப்பாடி ஊராட்சி கிராம சர்வே எண்: 97/3A, 97/3B, 97/3D -ல் உள்ள 6819 சதுர.மீ ல் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவு நிலத்தினை குடியிருப்பு வரன்முறைப்படுத்துவதற்கு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் (in principle approval for layout framework) தொழில்நுட்ப அனுமதி — மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநரால் வழங்கப்பட்டது மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தி- ஆணையிடல். தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை எண் 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை, நாள் : 04.05.2017
2. அரசாணை எண் 172 வீட்டுவசதி மற்றும் நகர்புறு வளர்ச்சி (ந.வ.4 (3)த் துறை, நாள் : 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் வழிகாட்டி நெறிமுறைகள் கடிதம் ந.க.எண்:13193/2017/எல்ஏ2, நாள்: 30.10.2017,31.10.2017,07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.
4. நகர் ஊரமைப்பு துணை ஆணையர், மதுரை அவர்களின் ந.க.எண்: 8723/2019/மம 3, நாள்: 18.07.2019.
5. தொடர்புடைய ஆவணங்கள்.

-----------------------------

உத்தரவு :

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், தாமரைப்பாடி ஊராட்சி கிராம சர்வே எண்: 97/3A, 97/3B, 97/3D - ல் உள்ள 6819 சதுர.மீ ல் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள(1-6, 8-18, 22-30, 33,35,36,39,40) 31மனைகளை குடியிருப்புக்கு வரன்முறைப்படுத்துவதற்கு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் (in principle approval for layout framework) பார்வை 1 மற்றும் 2-ல் அரசாணைகளின் அடிப்படையில் மதுரை நகர் ஊரமைப்பு துணை ஆணையர் அவர்களின் கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் தொழில்நுட்ப அனுமதி பார்வை 4-ல் செயல்முறைகளின்படி உத்தரவிடப்பட்டுள்ளது.

அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் நிபந்தனைகள்

1. அரசாணை எண் 78 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(3))த் துறை, நாள் : 04.05.2017 மற்றும் அரசாணை எண் 172 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சி (UD4(3))த் துறை, நாள் : 13.10.2017-ல் கண்டுள்ள வழிகாட்டுதல்களை அனுமதியற்ற மனைப்பிரிவு மற்றும் அதில் கண்டுள்ள மனைகள் வரன்முறைக்கு கடைபிடித்தல் வேண்டும்.
2. மனைப்பிரிவில் உள்ள விற்கப்பட்ட மனைகள் வரன்முறைப்படுத்தப்படும் பொழுது அம்மனைகளின் அளவுகளுக்கு பத்திரப்பதிவில் அமைந்துள்ளபடியே கருத்திற்கொண்டு உரிய கட்டணங்கள் பெற்று வரன்முறைப்படுத்தப்படல் வேண்டும்.
3. இந்த அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கை அளவில் (in principle approval for layout framework) ஒப்புதல் மட்டும் அளிக்கப்படுகிறது. (அரசாணை எண் 78 பிரிவு 5(4))
4. இந்த அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு பதிவுத்துறையில் பதியப்பட்டுள்ள வில்லங்கச் சான்று (Encumbrance Certificate) Online-ல் கண்டறியப்பட்டு விற்கப்பட்ட மனைகள் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. பதிவு செய்யப்படாத மனைகளுக்கு இத்துறை பொறுப்பேற்காது.
5. அனுமதியற்ற மனைப்பிரிவு இடத்திற்கு நீதிமன்ற ஆட்சேபனை மற்றும் சட்டப்பூர்வமான புகார் மற்றும் வில்லங்கள் தெரியப்படுத்தப்படின் உறுப்பினர் செயலரால் ஆய்வுக்குட்பட்டு இந்த ஒப்புதல் ரத்து செய்யப்படும்.
6. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கேட்பு கணக்கீட்டுத் தாளின்படி (Demand Working Sheet) மற்றும் அரசாணையில் கண்டுள்ளதின்படியும் அனைத்து கட்டணங்களும் இம்மனைப்பிரிவில் உள்ள ஒவ்வொரு மனைக்கும் பெறப்பட்டு அம்மனைகள் வரன்முறைப்படுத்தப்படல் வேண்டும்.
7. மனைப்பிரிவு வரைபட அளவுக்கு மாறுபாடு அமைந்திருப்பின் உரிய ஆதாரங்களுடன் விண்ணப்பித்தால் திருத்திய மனைப்பிரிவு வரைபடம் தயாரித்து ஒப்புதல் அளிக்கப்படும்.
8. அரசாணையில் கண்டுள்ளபடி மனைப்பிரிவு சாலை உள்ளாட்சியில் ஒப்படைக்கப்பட்டு வருவாய் துறையிடம் உள்ளாட்சியால் உட்பிரிவு பெறப்படல் வேண்டும்.

மேற்காணும் நிபந்தனைகளின்படி திண்டுக்கல் கிழக்கு வட்டம், தாமரைப்பாடி ஊராட்சி கிராம சர்வே எண்: 97/3A, 97/3B, 97/3D -ல் உள்ள 6819 சதுர.மீ ல் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள(1-6, 8-18, 22-30, 33,35,36,39,40) 31 மனைகளை குடியிருப்புக்கு வரன்முறைப்படுத்துவதற்கு

வரன்முறைப்படுத்துல் கட்டணம் (அரசாணை எண் 78 பிரிவு 9(1)-ன்படி) அபிவிருத்திக் கட்டணம் (அரசாணை எண் 78 பிரிவு (10)-ன்படி மற்றம் அரசாணை எண் 172 பிரிவு (6)-ன்படி) பரிசீலனைக் கட்டணம் (அரசாணை எண் 78 விதி (12)-ன்படி) ஒரு மனைக்கு ரூ.500/- வீதம் ஆகியவை சம்மந்தப்பட்ட நில உரிமையாளரால் கீழ்க்கண்ட விபரப்படி செலுத்தப்பட்டுள்ளது.

1. வரன்முறைப்படுத்துதல் கட்டணம் (அரசாணை எண் 78 பிரிவு 9 (1)-ன்படி) (பேரூராட்சி மற்றும் கிராமப் பகுதிகளில் ஒரு ச.மீ.-க்கு ரூ.37.50/- வீதம் அரசு தலைப்பில் செலுத்த வேண்டியது)

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு | : | 5.58 ஏக்கர் 23800 ச.மீ-ல் ச.மீ (தோராயமாக ) |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 40 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 7 |
| விற்கப்பட வேண்டிய மனைகளின் எண்ணிக்கை | : | 31 |
| தற்போது அனுமதி வழங்கப்படும் மனைகளின் எண்ணிக்கை | : | 31 |
| விற்கப்படாத மனைகளின் மொத்தப் பரப்பு | : | 3921.48 ச.மீ |
| செலுத்தப்பட்ட தொகை | : | **3921.48ச.மீ** x ரூ.37.50/- = ரூ.147060/- ( 18.10.2019,22.04.2019) அன்று உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது) |

2. அபிவிருத்திக் கட்டணம் (அரசாணை எண் 78 பிரிவு 10-ன்படி மற்றும் அரசாணை எண் 172 பிரிவு 6-ன்படி) (சம்மந்தப்பட்ட உள்ளாட்சிக் கணக்கில் செலுத்தப்பட வேண்டும்)

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு | : | 5.58 ஏக்கர் 23800 ச.மீ- (தோராயமாக ) |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 40 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 7 |
| விற்கப்பட வேண்டிய மனைகளின் எண்ணிக்கை | : | 31 |
| தற்போது அனுமதி வழங்கப்படும் மனைகளின் எண்ணிக்கை | : | 31 |
| விற்கப்படாத மனைகளின் மொத்தப் பரப்பு | : | 3921.48 ச.மீ |
| செலுத்தப்பட்ட தொகை | : | **3921.48ச.மீ** x ரூ.25/- = ரூ.98050/- (18.10.2019 அன்று உரிய அரசுத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது) |

3. விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பில் பொது ஒதுக்கீடு

1058.01 ச.மீ.-க்கு OSR (Open Space Reservation) ஒதுக்கீடு செய்யப்பட்டு பொது ஒதுக்கீடு இடம் தமிழ்நாடு ஆளுனருக்காக மேற்படி ஆளுனரின் பிரதிநிதியாக பெரியகோட்டை ஊராட்சி மன்றத்திற்கு வடமதுரை சப்ரி ஆபிஸ் ஆவண எண்:3801/2019-ன்படி பதிவு செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

4. பரிசீலனைக் கட்டணம் (அரசாணை எண் 78 விதி 12-ன்படி) (ஒரு மனைக்கு ரூ.500/- வீதம் இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்)

| | | |
|---|---|---|
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 40 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 7 |
| விற்கப்பட வேண்டிய மனைகளின் எண்ணிக்கை | : | 31 |
| செலுத்தப்பட்ட தொகை | : | 15500( இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது) |

பார்வை 4-ல் காணும் மதுரை நகர் ஊரமைப்பு துணை ஆணையர் அவர்களின் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டவாறு மேற்சொல்லப்பட்ட கட்டணங்கள் செலுத்தப்பட்டு, அதற்கான ஆவணங்கள் அனைத்தும் மனை உரிமையாளரால் சமர்ப்பிக்கப்பட்டது.

அதன் அடிப்படையில், திண்டுக்கல் கிழக்கு வட்டம், தாமரைப்பாடி ஊராட்சி கிராம சர்வே எண்: 97/3A, 97/3B, 97/3D -ல் உள்ள 6819 சதுர.மீ ல் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவில் உள்ள(1-6, 8-18, 22-30, 33,35,36,39,40) 31 மனைகளை குடியிருப்புக்கு வரன்முறைப்படுத்துவதற்கு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் (In principle approval for layout framework) பார்வை 1 மற்றும் 2-ல் அரசாணைகளின் அடிப்படையில் திண்டுக்கல் உள்ளூர் திட்டக் குழுமத்தால் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுடன் மனைப்பிரிவாக வரன்முறைப்படுத்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

இணைப்பு : வரைபடம்-1

(கையொப்பம்) 12-11-19

தனி அலுவலர் /
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல்.

(கையொப்பம்) 8-11-19

பெறுநர்:
உரிமையாளர், திரு.அப்துல்கபூர் மற்றும் மூவர்,
நம்பர் -9, கோல்டன் சிட்டி,
தாமரைப்பாடி (அஞ்சல்),
திண்டுக்கல்.

நகல் :
நகர் ஊரமைப்பு துணை ஆணையர், மதுரை.

# தாமரைப்பாடி ஊராட்சி
# தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ) அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை:-திரு.பா.மலரவன்,பி.எஸ்.சி,

ந.க.எண்: 2967/2019/ஊ.2

நாள்:15.10.2019

பொருள்: மனைப்பிரிவு அங்கீகாரம்-அரசு சட்டவிதிமுறைகளின்படி அரசு தலைப்பில் கட்டணங்களை செலுத்த உத்தரவிடுதல்-சார்பாக.

பார்வை:
1. அரசாணை நிலை எண்:78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:04.05.2017
2. அரசாணை நிலை எண்:172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள்:13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்கள் வழிகாட்டி நெறிமுறைகள் கடிதம் ந.க.எண்:13193/2017/எல்ஏ2, நாள்: 31.10.2017 மற்றும் 07.11.2017
4. மதுரை நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்களின் ந.க.எண்: 8723/2019/மம 3, நாள்: 18.07.2019

**உத்தரவு**

திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், தாமரைப்பாடி ஊராட்சி சர்வே எண்: 97/3A, 97/3B, 97/3D -ல் உள்ள 6819 சதுர.மீ ல் அமைக்கப்பட்ட அனுமதியற்ற மனைப்பிரிவு நிலத்தினை வரன்முறைப்படுத்த தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கி, அரசாணை பார்வை -1,2-ன் படி, பார்வை-3,4,-ல் காணும் கடிதத்தின் மூலம் உத்தரவிட்டுள்ளார். இந்த உத்தரவினை ஏற்று மனையை வரைமுறைப்படுத்த ஏதுவாக பார்வை-2ல் காணும்அரசாணைப்படி அரசு தலைப்பின் கீழ் செலுத்த வேண்டிய கட்டணங்களை கீழ்க்கண்ட விபரப்படி

வரன்முறைக் கட்டணம் :DTCP(DPC:0217 60 800 AT 2730)என்ற அரசு தலைப்பில் கருவூல சலான் மூலம்.

அபிவிருத்தி கட்டணம்:
(ஊராட்சி கணக்கில்) :சம்பந்தபட்ட ஊராட்சியில்
செலுத்திவிட்டு அதன் உண்மை நகலை இவ்வலுவகலத்திற்கு உரிய காலத்திற்குள் சமர்ப்பித்திட தெரிவிக்கப்படுகிறது. (மேலும் ஊரட்சிக்கு தானமாக வழங்க வேண்டிய பொது திறந்தவெளி இடத்தினை தானமாக பதிவு செய்து அசல் பத்திரத்தினை சமர்ப்பிக்க தெரிவித்துக் கொள்கிறேன்).

| வ.எண் | மனைப்பிரிவு | மனை இட அளவு (சதுர மீட்டரில்) | வரன் முறை படுத்தல் கட்டணம் | பரிசீலனைக்கட்டணம் | அபிவிருத்தி கட்டணம் (ஊராட்சி கணக்கில்) |
|---|---|---|---|---|---|
| 1 | 31 | 3921.48 | 147060 | 15500 | 98050 |
| மொத்தம் | | 3921.48 | 147060 | 15500 | 98050 |

15/10/19

தனிஅலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
தாமரைப்பாடி ஊராட்சி,
திண்டுக்கல் ஒன்றியம்.

பெறுநர்:

திரு.அப்துல்கபூர் மற்றும் மூவர்,
நம்பர் -9, கோல்டன் சிட்டி,
தாமரைப்பாடி (அஞ்சல்),
திண்டுக்கல்.

15/10/19

22/10

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை மண வடிக்கைகள்
முன்னிலை : திரு.மு.மதிமார

ந.க.எண்.8723/2018, மம 3 , நாள்.18.7.2019.

திருவள்ளுவர் ஆண்டு 2050, விகாரி வருடம், ஆடி திங்கள். -ஆம் நாள்.

பொருள் : அனுமதியற்ற மனைப்பிரிவுகள், மனைகள் வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 - நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அலுவலகம் - மதுரை மண்டலம் - திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், தாமரைப்பட்டி ஊராட்சி, தாமரைப்பட்டி கிராமம், சர்வே எண்கள்.97/3A, 97/3B, 97/3C, 97/3D -ல் 1.685 ஏக்கர் (6819.00 சமீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல் - தொடர்பாக.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 04.05.2017. மற்றும் அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017
2. அரசாணை (நிலை) எண்.55, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 2.5.2018 மற்றும் அரசாணை (நிலை) எண்.21, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 4.2.2019
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை -02, அவர்களின் வழிகாட்டி நெறிமுறை ந.க.எண். 13193/2017/எல்ஏ2, நாள். 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017, 20.12.2017, 3.1.2019, 7.1.2019, 21.2.2019 மற்றும் 28.3.2019
4. மனுதாரர் திரு.Aஅப்துல் கபூர் மற்றும் மூவர் அவர்களின் விண்ணப்பம் எண். DTCP/L/0215188/2017, நாள்.2.5.2018.

*****

**உத்தரவு :**

பார்வை (1) மற்றும் (2)-ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)-ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)-ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், தாமரைப்பட்டி ஊராட்சி, தாமரைப்பட்டி கிராமம், சர்வே எண்கள்.97/3A, 97/3B, 97/3C, 97/3D -ல் 1.685 ஏக்கர் (6819.00 சமீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண்.433/2019** என எண்ணிடப்பட்டு கீழ்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| மனைப்பிரிவின் மொத்த பரப்பு | 1.685 ஏக்கர் (6819.00 சமீ) |
| சமர்ப்பிக்கப்பட்ட வரைபடத்தின்படி மொத்த மனைகள் | : 42 எண்ணம். |
| ஒதுக்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : 38 எண்ணம். |
| ஒதுக்கப்பட்ட மனை எண்கள் | : (1 to 30, 33 to 40) |
| மனுதாரர் உபயோகம் | 01 எண்ணம் |

| | | |
|---|---|---|
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 07 எண்ணம் |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | (7,19,20,21,34,37,38) |
| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை | : | 31 எண்ணம் |
| விற்கப்படாத மனை எண்கள் | : | (1-6,8-18,22-30,33,35,36,39,40) |
| மனுதாரர் உபயோகம் | | 01 எண்ணம் |
| திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு | : | 439.67 ச.மீ (10.08 %) |

**செலுத்தப்பட வேண்டிய கட்டண விபரம்**

**1. பரிசீலனைக் கட்டணம்**

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விபரம் | (1,18,24,28,40) |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்த வேண்டும்.

**2 .வரன்முறைபடுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்**

| ஒதுக்கப்பட்ட மனை எண்கள். | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.30 /- வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூ.25 /-வீதம்) |
|---|---|---|
| (1 to 30, 33 to 40) | வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ.30/- வீதம் செலுத்தப்படல் வேண்டும். | வரன்முறைப்படுத்தப்பட வேண்டிய ஒவ்வொரு மனைக்கும் சதுர மீட்டருக்கு ரூ.25/- வீதம் செலுத்தப்படல் வேண்டும். |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

**(அ). வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு:**

| | |
|---|---|
| 0217.Urban Development - 60 Other Urban Development Scheme - 800. Other receipts AT Receipts under Regularisation charges of Unapproved layout and Plots – DTCP- 27-Non Taxation Fees – 30 Regularisation.<br>(DPC 0217 60 800 AT 2730) | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

**(ஆ). வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.**

வங்கியின் பெயர் மற்றும் கணக்கு எண் : <u>உள்ளாட்சியில் பெற்று செலுத்தப்படல் வேண்டும்</u>

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறைப்படுத்தி ஆணை வழங்கப்படல் வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கும் அல்லது முறைப்படுத்தக் கோரும் மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்று ம் (2)-ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நவ4(3), நாள். 13.10.2017-ல் விதி எண். 7(g)(ii)-ன்படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

3. ஒப்புதலளிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் முழுமையாக பின்பற்றப்படல் வேண்டும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

23/7/2019

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்,
மதுரை மண்டலம்.

23/7/19

<u>இணைப்பு</u>

மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்.

<u>பெறுநர்</u>

தனி அலுவலர்/வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம்,
திண்டுக்கல் மாவட்டம்.

<u>நகல்</u>

| | |
|---|---|
| 1. திரு.Aஅப்துல் கபூர் மற்றும் மூவர், No.9, கோல்டன் சிட்டி, தாமரைப்பட்டி அஞ்சல், திண்டுக்கல் மாவட்டம் - 624005. | கடித நகல் மட்டும் |
| 2. உதவி இயக்குநர், நில அளவை பதிவேடுகள் துறை, திண்டுக்கல் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு. |
| 3. சார்பதிவாளர், வடமதுரை சார்பதிவாளர் அலுவலகம், திண்டுக்கல் மாவட்டம். | சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவு செய்யும் பொருட்டு. |
| 4. தொழில்நுட்ப வைப்பறை - | 1 வரைபடம். |